**மார்ச் – 02**

# TNPSC துளிகள்

❖ ஐந்தாவது தமிழ்நாடு காவல் ஆணையமானது, காவல்துறையினரின் பெரும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிராக, குறிப்பாக வாய்மொழி வாயிலான துஷ்பிரயோகம், உண்மையான வழக்குகளைப் பதிவு செய்யாதது, பொய்யான வழக்குகளைப் பதிவு செய்தல், மிகத் தவறான தடுப்புக் காவல்கள் அல்லது கைதுகள், குற்றம் சாட்டப் பட்ட நபர்களை மிருகத்தனமாக நடத்துதல், பாரபட்சமான அல்லது மிகவும் நியாயமற்ற விசாரணை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட அமலாக்கம் ஆகியவற்றிற்கு எதிராக கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது.

❖ ஆப்பிரிக்க-ஆசிய கிராமப்புற மேம்பாட்டு அமைப்பு (AARDO) ஆனது, புது டெல்லியில் நடைபெற்ற அதன் 21வது பொது மாநாட்டின் பொதுக் கூட்டத்தில், 2025-27 ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளுக்கான ஒரு காலக் கட்டத்திற்காக வேண்டி தலைமை பொறுப்பிற்கு இந்தியாவை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஹைட்ரோகார்பன் அகழ்வு ஆய்விற்கான ஏலக்குத்தகை ஒப்பந்தம் – தமிழ்நாடு




❖ தென் தமிழகத்தின் மன்னார் வளைகுடாவின் ஆழ்கடல் பகுதியில் 9,990.96 சதுர கி.மீ பரப்பளவு ஆனது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தினால் வழங்கப்பட்ட ஹைட்ரோகார்பன் ஆய்வுக்கான மிகச் சமீபத்திய ஒரு ஏலக்குத்தகை ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

❖ நிறுவனங்கள் அதன் எண்ணெய் அகழெடுப்பு ஆய்வு உரிமைகளுக்கான ஏலங்களை சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கின்ற வகையில் சுதந்திரமாக உற்பத்தித் தொகுதிகளைத் தேர்ந்தெடுத்து உரிமம் பெறுதல் திட்டத்தின் 10வது சுற்று ஏலத்தின் ஒரு பகுதியாகும்.

❖ இந்த ஏலக் குத்தகை ஒப்பந்தமானது, மொத்தம் 1,91,986 சதுர கி.மீ பரப்பிலான கடல் பரப்பைக் கொண்டுள்ள நாடு முழுவதும் உள்ள 25 கடல் பகுதிகளை உள்ளடக்கியது.

❖ ஹைட்ரோகார்பன் அகழெடுப்பு ஆய்வு மற்றும் உரிமக் கொள்கையின் கீழ் ஒரே ஏலச் சுற்றில் ஏக்கர் அளவிலான மிகப்பெரிய அளவு நிலப்பரப்பு வழங்கப்படுவதை இது குறிக்கிறது.

❖ மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம் ஆனது, கடல் பசு, ஆமைகள் மற்றும்

கடல் சார் பாலூட்டிகள் போன்ற அரிய மற்றும் அழிந்து வரும் உயிரினங்கள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன.

# தேசியச் செய்திகள்

## பாரம்பரியத் தளங்களைத் தத்தெடுத்தல் 2.0 திட்டம்





- பிஸ்லெரி இன்டர்நேஷனல் நிறுவனம் ஆனது, 'பாரம்பரியத் தளங்களை தத்தெடுத்தல் 2.0 திட்டத்தின்' கீழ், இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையத்துடன் (ASI) இணைந்து ஓர் உத்தி சார் கூட்டாண்மையை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தச் சங்கமானது, நிலையான ஒரு நீர் மேலாண்மையுடன் பாரம்பரியத் தளங்களின் பாதுகாப்பு திட்டத்தினை இணைப்பதில் ஒரு முக்கிய படி நிலையைக் குறிக்கிறது.
- பிஸ்லெரி CSR முன்னெடுப்பான 'நயி உமீத்' ஆனது, ராஜஸ்தானின் அபானேரியில் உள்ள சந்த் பாவோரி, நீம்ரானாவில் உள்ள பாவோரி, இரந்தம்பூர் கோட்டையில் உள்ள பத்மா மற்றும் இராணி தலாப்கள் மற்றும் காலிஞ்சர் கோட்டையில் உள்ள புத்த புத்தி குளம் ஆகிய நான்கு மிகப்பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்நிலைகளை ஏற்றுப் பராமரிக்க உள்ளது.


## ஐஎன்எஸ் குல்தார் – கடலடி அருங்காட்சியகம்




- இந்தியக் கடற்படையானது படையிலிருந்து நீக்கப்பட்ட ஐஎன்எஸ் குல்தார் எனப்படும் கடற்கரையில் நிலை நிறுத்தும் வகையிலான ஒரு கப்பலினை மகாராஷ்டிரா சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.
- இந்தக் கப்பலானது, இந்தியாவின் முதல் கடலடி அருங்காட்சியகமாகவும் செயற்கைப் பவளப்பாறையாகவும் மாற்றப்பட உள்ளது.

- இந்தக் கப்பல் ஆனது, போலந்தின் கிட்நியா கப்பல் கட்டும் தளத்தில் கட்டமைக்கப் பட்டு, 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் தேதியன்று இந்தியக் கடற்படையில் இணைக்கப் பட்டது.
- இந்தக் கப்பல் ஆனது 1985 முதல் 1995 ஆம் ஆண்டு வரை கிழக்குக் கடற்படை பிரிவின் ஓர் அங்கமாக இருந்தது.
- பின்னர் அது அந்தமான் மற்றும் நிக்கோபார் படைப் பிரிவில் மீண்டும் நிலை நிறுத்தப் பட்டு, 2024 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதியன்று படையிலிருந்து நீக்கப்படும் வரை சேவையாற்றியது.

## Pig Butchering மோசடி




- 'Pig Butchering மோசடி' எனப்படும் புதிய இணைய வெளி மோசடி குறித்து அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
- புதிய இயங்கலை மோசடி தொகுதி ஆனது, 'Pig Butchering மோசடி' அல்லது 'முதலீட்டு மோசடி' என்று அழைக்கப்படுகிறது.
- இது வேலைவாய்ப்பில்லாத இளையோர்கள், மாணவர்கள் மற்றும் எளிதில் பாதிக்கப் படக் கூடிய நபர்களை குறிவைக்கும் விதமாக மேற்கொள்ளப்படுகிறது.
- பாதிக்கப்பட்டவர்கள் பணத்தை இழப்பது மட்டுமல்லாமல் இணையவெளி அடிமைத் தனத்திற்கும் தள்ளப்படுகிறார்கள்.
- இத்தகைய மோசடி ஆனது முதன்முதலில் 2016 ஆம் ஆண்டு சீனாவில் தோன்றியதாக நம்பப்படுகிறது.


# சர்வதேசச் செய்திகள்

## தேயிலை குதிரை வர்த்தக சாலை

- 2,000 கி.மீ.க்கும் மேலான பரப்பில் பரவியிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தேயிலை குதிரை வர்த்தக சாலையானது, சீன நாட்டினைத் திபெத் வழியாக இந்தியாவுடன் இணைத்தது.
- இப்பண்டைய தேயிலை-குதிரை வர்த்தக சாலையானது, பழங்காலத்தில் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பரிமாற்றங்கள் மற்றும் தொடர்புகளுக்குச் சாட்சியாக உள்ளது.
- சீனாவையும் ஐரோப்பாவையும் இணைத்த பட்டு வர்த்தகச் சாலையைப் போல

மிகவும் நன்கு அறியப் படாவிட்டாலும், தேயிலை குதிரை வர்த்தகச் சாலையானது பல நூற்றாண்டுகளாக ஒரு முக்கிய வணிகப் பாதையாக இருந்தது.

- இத்தேயிலை குதிரை வர்த்தகச் சாலை என்பது ஒற்றை சாலையைக் குறிக்கவில்லை, மாறாக தென்மேற்கு சீனாவில் தொடங்கி இந்திய துணைக் கண்டத்தில் முடிவடைந்த பல்வேறு கிளைப் பாதைகளின் வலையமைப்பைக் குறிக்கிறது.
- இரண்டு முக்கியப் பாதைகள் யுன்னான் மாகாணத்தில் உள்ள டாலி மற்றும் லிஜியாங் போன்ற சில நகரங்கள் வழியாகச் சென்று, திபெத்தில் உள்ள லாசாவை அடைந்து, இந்தியாவிற்குள் நுழைகின்றன.
- இத்தேயிலை குதிரை வர்த்தகச் சாலையின் தோற்றுருவானது சீனாவில் உள்ள டாங் வம்சத்தின் ஆட்சியில் (கி.பி 618-907) நிறுவப்பட்டது.
- புத்தத் துறவி யிஜிங்கின் (கி.பி 635-713) படைப்புகளில் சர்க்கரை, ஜவுளி மற்றும் அரிசி நூடுல்ஸ் போன்ற பொருட்கள் தென்மேற்கு சீனாவிலிருந்து திபெத்திற்குக் கொண்டு செல்லப் பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவிலிருந்து குதிரைகள், தோல் பொருட்கள், திபெத்தியத் தங்கம், குங்குமப்பூ மற்றும் பிற மருத்துவ மூலிகைகள் சீனாவிற்கு கொண்டு செல்லப்பட்டன.





# பொருளாதாரச் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய புதியப் பங்கு வெளியீட்டு - இந்தியா

- 2024 ஆம் ஆண்டில் மிகவும் முதல் முறையாக உலகளாவிய புதியப் பங்கு வெளியீட்டு அளவுகளில் இந்தியா முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.
- 183 வெளியீடுகளைக் கொண்ட அமெரிக்காவை விட மட்டுமே இது பின்தங்கியுள்ளது.
- ஐரோப்பிய நாடுகளில் பதிவானதை விட சுமார் இரண்டரை மடங்குக்கும் அதிகமான வெளியீடுகள் இந்தியாவில் பதிவானது.
- சுமார் 19.9 பில்லியன் டாலர் மதிப்பில் 2024 ஆம் ஆண்டில் பதிவான IPO அளவுகள்


ஆனது இந்தியாவில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பதிவானதை விட மிக அதிக பட்சமாக உள்ளது.

- 2021 ஆம் ஆண்டில் அதன் உச்சகட்ட மதிப்பிற்குப் பிறகு முதல் முறையாக, 2024 ஆம் ஆண்டில் IPO வரவுடன் (32.8 பில்லியன் டாலர்) உலகளவில் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்தது.




## 2024 ஆம் ஆண்டில் வங்கிக் கடன்கள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது, அதன் மதிப்பீடுகளைப் பொறுத்து வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கான வங்கிக் கடன்களின் இடர் உண்டாக்கும் விகிதத்தினை சுமார் 25 சதவீதப் புள்ளிகள் வரை குறைத்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது NBFC வங்கிகளுக்கான கடன் வழங்கீட்டினைக் கணிசமாக மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- NBFC வங்கிகளுக்கான வங்கிக் கடன் ஆனது, 2024 ஆம் ஆண்டில் நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வியத்தகு முறையில் குறைந்து 6.7 சதவீதமாகக் குறைந்துள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணை

- இந்தியா அதன் முதல் வகையான கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணையை ஒடிசா கடற்கரையில் உள்ள சந்திப்பூரில் இருந்து ஏவி மிக வெற்றிகரமாக சோதனை செய்து உள்ளது.

- இது சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் இருந்து (ITR) அதன் முதல் வகையான கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணை (NASM-SR) ஆகும்.
- இந்த எறிகணையானது முனைய வழிகாட்டுதலுக்காக ஓர் உள்நாட்டு வரைபடமாக்க அகச்சிவப்பு தேடு கருவியினைப் பயன்படுத்துகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஃபென்டேல் எரிமலை வெடிப்பு




- எத்தியோப்பியாவில் உள்ள ஃபென்டேல் எரிமலை வளிமண்டலத்தில் மிக அதிக அளவு மீத்தேன் வாயுவினை வெளியேற்றியுள்ளது.
- இந்த எரிமலையானது ஆற்றல் வாய்ந்த பசுமை இல்ல வாயுவின் பெரிய பிழம்புகளை வெளியேற்றியதால், ஆராய்ச்சியாளர்கள் இந்த நிகழ்வை "பர்ப்" என்று விவரித்து

உள்ளனர்.

- இந்த எரிமலை ஆனது ஒரு மணி நேரத்திற்கு 58 மெட்ரிக் டன் மீத்தேன் வாயுவினை வெளியேற்றியுள்ளது.
- மீத்தேன் ஆனது, 100 ஆண்டு காலத்தில் கார்பன் டை ஆக்சைடு வாயு உட்கிரகிக்கும் வெப்பத்தினை விட 28 மடங்கு அதிக வெப்பத்தைத் தேக்கி வைக்கிறது.
- இது உலக வெப்பமயமாதலுக்கு மிக அதிகளவுப் பங்கினை அளிக்கும் இரண்டாவது வாயுவாக உள்ளது.
- இது உலகின் மொத்தப் பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வில் சுமார் 11% உமிழ்விற்கு காரணமாகும்.
- ஃபென்டேல் எரிமாலையானது அடிக்கடி வெடிக்காத எரிமலையாகும்.
- கடைசியாக 1820 ஆம் ஆண்டில் தான் இது வெடித்தது.

# மாநிலச் செய்திகள்

## ஜூமூர் நடனம் 2025





- வரலாற்றில் "மிகப்பெரிய" ஜூமூர் நடன நிகழ்வு ஆனது அசாமில் நடைபெற்றது.
- 2025 ஆம் ஆண்டில், அசாம் மாநிலத்தின் தேயிலைத் தொழில் துறையின் 200வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஜூமோயர் பினாண்டினி என்னுமிடத்தில் சுமார் 8,600 நடனக் கலைஞர்கள் இந்த நிகழ்வினை நிகழ்த்தினர்.
- இங்கு "tea tribe-தேயிலை பழங்குடி" என்ற ஒரு சொல் ஆனது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் சந்ததியினரின் பல கலாச்சார, பல இனம் சார் சமூகத்தைக் குறிக்கிறது.
- இந்த மக்கள் மத்திய இந்தியாவிலிருந்து, 19 ஆம் நூற்றாண்டில் அசாமில் குடியேறி ஆங்கிலேயர்கள் அமைத்து வந்த தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்தனர்.

- அவர்கள் பெரும்பாலும் இன்றைய ஜார்க்கண்ட், ஒடிசா, சத்தீஸ்கர் மற்றும் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

### சோலிகா பழங்குடியினர்

- பிலிகிரி ரங்கணா மலைகள் (BRT) என்ற புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள புலிகள் எண்ணிக்கை அதிகரிப்பதில் சோலிகா பழங்குடியினர் சமூகத்தின் பங்கைப் பிரதமர் பாராட்டியுள்ளார்.
- சோலிகா பழங்குடி இனத்தின் மக்கள் தொகையானது, சுமார் 40,000 ஆகும் என்பதோடு அவர்களில் பலர் கர்நாடகாவின் சாமராஜ்நகர் மாவட்டத்தில், குறிப்பாக பிலிகிரி ரங்கணா மலைப் பகுதியில் வாழ்கின்றனர்.
- 2011 ஆம் ஆண்டில் இந்தப் புலிகள் வளங்காப்பகத்திற்குள் வனம் சார்ந்த நிலம் மீதான உரிமைகளைப் பெற்ற முதல் இனத்தவர் இவர்களே ஆவர்.
- இங்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாக சுமார் 8-10 புலிகளாக இருந்தப் புலிகளின் எண்ணிக்கை தற்போது சுமார் 50 புலிகளாக அதிகரித்துள்ளது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### தேசிய தன்வந்தரி ஆயுர்வேத விருதுகள் 2025

- நடப்பு ஆண்டிற்கான தேசிய தன்வந்தரி ஆயுர்வேத விருதுகளை ஆயுஷ் அமைச்சகம் மூன்று புகழ்பெற்ற மருத்துவர்களுக்கு வழங்கியுள்ளது.
- பாரம்பரிய இந்திய மருத்துவத் துறையில் அவர்கள் ஆற்றிய மிகப்பெரும் மகத்தான பங்களிப்புகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.
- இந்த ஆண்டு விருதைப் பெற்றவர்கள்
    - புகழ்பெற்ற நாடி வைத்தியர் மற்றும் எழுத்தாளர் வைத்ய தாரா சந்த் சர்மா;
    - 60 ஆண்டுகால சேவையுடன் திரவியகுண விஞ்ஞானத்தின் புகழ்பெற்ற அறிஞர்

வைத்ய மாயா ராம் உனியல்; மற்றும்

- விஸ்வ வியாக்யன்மாலா தேசிய மாநாட்டின் நிறுவனரான வைத்ய சமீர் கோவிந்த் ஜமதக்னி.




# இதரச் செய்திகள்

## நேரப் பயன்பாடு குறித்த கணக்கெடுப்பு 2024

**AVERAGE TIME SPENT IN A DAY PER PERSON**

| | 2019 | | 2024 | |
|---|---|---|---|---|
| | Male | Female | Male | Female |
| Self-care and maintenance | 729 | 723 | 710 | 706 |
| Employment and related activities | 459 | 333 | 473 | 341 |
| Learning | 426 | 423 | 415 | 413 |
| Unpaid domestic services for household members | 97 | 299 | 88 | 289 |
| Culture, leisure, mass media, sports | 164 | 165 | 177 | 164 |
| Socialising and communication, community participation and religious practice | 147 | 139 | 138 | 139 |
| Unpaid volunteer, trainee and other unpaid work | 102 | 99 | 139 | 108 |
| Unpaid caregiving services for household members | 76 | 134 | 75 | 137 |
| Production of goods for own final use | 198 | 116 | 137 | 104 |

- இரண்டாவது அகில இந்திய நேரப் பயன்பாட்டு கணக்கெடுப்பு 2024 ஆனது, சமீபத்தில் புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தினால் வெளியிடப் பட்டு உள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் பெண்கள் ஊதியம் வழங்கப்படாத வீட்டு வேலைகளில் தங்கள் வீட்டு உறுப்பினர்களுக்காக ஒரு நாளில் செலவிடும் நேரம் 10 நிமிடங்கள் குறைந்து 289 நிமிடங்களாகக் குறைந்தது.
- இது 2019 ஆம் ஆண்டில் 299 நிமிடங்களாக இருந்தது.
- கடந்த ஆண்டு ஆண்களை விட பெண்கள் வீட்டு உறுப்பினர்களுக்கான ஊதியம் வழங்கப்படாத வீட்டு சேவைகளில் ஒரு நாளில் 201 நிமிடங்கள் அதிகமாகச் செலவிட்டு உள்ளனர்.
- ஆண்களை விட பெண்கள் தம் வீட்டு உறுப்பினர்களுக்கான ஊதியம் வழங்கப்படாத பல பராமரிப்பு நடவடிக்கைகளில் ஒரு நாளில் 62 நிமிடங்கள் அதிகமாகச் செலவிட்டு உள்ளனர்.
- 15 முதல் 59 வயதுடைய பெண்கள் சுமார் 305 நிமிடங்கள் அதிக நேரம் செலவிட்டதால் ஊதியம் வழங்கப்படாத வீட்டு வேலைகளில் அவர்களின் பங்கு 2024 ஆம் ஆண்டில் அதிகமாகவே இருந்தது.
- இருப்பினும், வேலை மற்றும் அது தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு என்று, ஆண்கள் பெண்களை விட சுமார் 132 நிமிடங்களை அதிகமாகச் செலவிட்டனர் (பெண்கள் 341 நிமிடங்கள், ஆண்கள் 473 நிமிடங்கள்).
- இங்கு ஒட்டு மொத்தமாக, 2024 ஆம் ஆண்டில் ஒரு நாளில் சுமார் 83.9 சதவீதப் பெண்கள் ஊதியம் வழங்கப்படாத செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.
- இது 2019 ஆம் ஆண்டில் 84.0 சதவீதமாக இருந்த நிலைக்கு கிட்டத்தட்டச் சமம் ஆகும்.
- ஊதியம் வழங்கப்படாதச் செயல்பாடுகளில், அவர்களின் பங்கு 2019 ஆம் ஆண்டில் 17.1 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 20.6 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- ஊதியம் வழங்கப்படாதச் செயல்பாடுகளில் ஆண்களின் பங்கேற்பு விகிதம் 2019 ஆம் ஆண்டில் 43.9 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 45.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- ஊதியம் வழங்கப்படாத வேலைகளில், அவர்களின் பங்கு 54.8 சதவீதத்திலிருந்து 60.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் ஆண்கள் கற்றல் நடவடிக்கைகளில் 415 நிமிடங்கள் செலவிட்டனர் என்ற நிலையில் இது 2019 ஆம் ஆண்டில் பதிவான முந்தைய 426 நிமிடங்களிலிருந்து குறைவாகும்.
- பெண்கள் 2024 ஆம் ஆண்டில் அத்தகையச் செயல்பாடுகளில் சுமார் 413 நிமிடங்கள் செலவிட்டனர் என்ற ஒரு நிலைமையில் இது 2019 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 423 நிமிடங்களிலிருந்து குறைந்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★